1973 நவம்பர் 21]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : பின்தங்கியோர் நலக் குழுவின் பரிந்துரைகள் அத்தனையையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றில்லை. அதில் சிலவற்றை மாற்றவும் கூடும். உறுப்பினர் கருத்தை சமயம் வரும்போது பரிசீலனை செய்ய அரசாங்கம் தயார்.

திரு. சி. ஆறுமுகம் : நம்முடைய எதிர்க் கட்சி அம்மையார் அவர்கள் குறிப்பிட்ட இனத்தினருக்கு கேரளாவில் உள்ளதுபோல் சலுகை தமிழ்நாட்டில் அளிக்கப்படவில்லை என்று கூறினார்கள். கேரளா நாட்டில் ஹரிஜனங்களுக்குச் சலுகைகள் இல்லை என்று சொல்கிறார்களே அது அரசாங்கத்திற்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அந்த விவரம் எனக்குத் தெரியாது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லத்து பிள்ளைமார் என்ற பெயர் பிற்பட்டோர் லிஸ்டில் இல்லாதபோது அவர்கள் இந்தப் பெயரை வைத்து ஸ்காலர்ஷிப்புக்கு விண்ணப்பங்கள் கொடுப்பார் களேயானால் உங்களுடைய டிப்பார்ட்மெண்ட் அதை அவ்வளவு சுலபமாக சாங்க்ஷன் செய்யுமா? இவைகளுக் கெல்லாம் அர சாங்கம் என்ன செய்ய முன்வந்திருக்கிறது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அம்மையார் அவர்கள் தெரிவித்தக் கருத்துக்கிணங்க ஏற்கெனவே இந்த உதவித் தொகை இல்லத்துப் பிள்ளைமார்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இல்லத்துப் பிள்ளைமார் என்ற பெயரில் விண்ணப்பிக்க வேண்டும்.

கள்ளர் சீரமைப்புப் பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர்கள் சம்பளம்

***263 வினா.—திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ஹையர் கிரேடு உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு மற்ற இலாகாவில் கொடுக்கப்படும் சம்பளம் இன்னும் தரப்படவில்லை என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : உண்மையல்ல. கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் ஹையர் கிரேடு உடற்பயிற்சி ஆசிரியர் களுக்கு மற்ற இலாகாவில் கொடுக்கப்படும் சம்பள விகிதப்படி கொடுக்கும்படி அரசு ஆணை (பலவகை) எண். 681, சமூக நலம், நாள் 30—7—1973-ன் கீழ் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வைகைக் கால்வாய் சீரமைப்பு

*264 வின—திரு. த. சோணையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1973-74-ம் ஆண்டில், வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்ட வேலைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?

(இ) இவ் வேலை எந்த ஆண்டு முடிவடையும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ரூ. 100 லட்சம்.

(இ) இவ் வேலை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மத்திய காலத்தில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. த. சோணையா : இத் திட்டம் ஏறத்தாழ பத்து பதினைந்து ஆண்டுகளாகவே நீடித்துக் கொண்டேயிருக்கிறது. இராமநாத புரம் மாவட்ட மக்கள் இதை வேகமாக எதிர்பார்க்கிறார்கள். ஆகவே அரசு இதை உடனடியாக முடிப்பதற்கு இன்னும் தீவிர மாக முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திட்டத்தைத் தீவிரமாக ஆக்குவதற்குத்தான் 1973-74-ல் 100 லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே நடப்பாண்டில் அத் திட்டத் திற்காக ரூபாய் 6.85 லட்சம் செலவிடப்பட்டிருக்கிறது.

வைகை ஆயக்கட்டின்கீழ் உள்ள கண்மாய்கள்

*265 வின—திரு. த. சோணையா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மேலவெள்ளூர், மாங்குடி கண்மாய்கள் வைகை ஆயக் கட்டில் சேர்க்கப்பட்டிருந்தது இப்பொழுது விடுபட்டுள்ளதா?